**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 - ஆம் நாள் சனிக்கிழமை

TNTV06-000190-2019

**அசல் வழக்கு எண்.132/2019**

முத்துக்குமரன் .... வாதி

**// எதிர் //**

செல்வகுமார் .... பிரதிவாதி

இவ்வழக்கு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்களும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ராதா, B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**தீர்ப்புரை**

தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ யாதொரு இடையூறும் செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும், தாவா செலவுத்தொகை மற்றும் இதர பரிகாரங்கள் வழங்க கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் :-**

**2.1.** தாவா சொத்து வாதிக்கு கடந்த 11.09.2018 ம் தேதியன்று வாதியின் தகப்பனாரால் வாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் கிடைக்கப்பெற்று அதுமுதல் வாதியின்

தனிப்பட்ட அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது. தாவா சொத்து வாதியின் பாட்டியாருக்கு கடந்த 25.07.1956 ம் தேதியிட்ட கிரய பத்திரத்தின்படி கிடைக்கப்பெற்று அதுமுதல் வாதியின் பாட்டியாருக்கு சொந்தமாக இருந்து அவருக்கு பிறகு வாதியின் தகப்பனாருக்கு கிடைக்கப்பெற்று வாதியின் தகப்பனார் தாவா சொத்தை ஆண்டு அனுபவம் செய்து வந்த வாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திய பிறகு அவரது பெயரில் பட்டா மாற்றம் செய்து கொண்டு நாளது தேதி வரை தொடர்ந்து சாகுபடி செய்து வருகிறார். தாவா சொத்திற்கு அருகில் பிரதிவாதிக்கு நிலம் உள்ளதால் தாவா சொத்தை கிரயத்திற்கு கேட்டு வாதி கொடுக்க மறுக்கவே, ஆத்திரம் கொண்ட பிரதிவாதி தொடர்ந்து வாதியின் சொத்தினை அபகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

**2.2.** வாதி தாவா சொத்தில் உழவு வேலை நடைபெற்று கொண்டிருந்தபோது கடந்த 12.10.2019 ம் தேதியில் வாதி ஆட்களை உழவு வேலை செய்யக்கூடாது என்றும், உடனடியாக தாவா சொத்தை விட்டு காலி செய்ய வேண்டும் என்றும், இல்லையேல் அவர்களுக்கு கிரயமாக கொடுத்துவிட வேண்டும் என்றும் பிரதிவாதி மிரட்டியுள்ளார். அதற்கு வாதி மறுக்கவே ஆத்திரம் கொண்ட பிரதிவாதி தாவா சொத்தை எப்படியும் ஆக்கிரமித்தே தீருவேன் என்று மிரட்டி சென்றுள்ளார். தாவா சொத்தில் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் தவறுதலாக குறிப்பிட்டுள்ளதை அவருக்கு அனுகூலமாக எடுத்துக்கொண்ட பிரதிவாதி தாவா சொத்தை எப்படியேனும் ஆக்கிரமித்து விட வேண்டும் என்ற கெட்ட நோக்கில் செயல்பட்டு வருகிறார்.

**2.3.** வாதியின் பாட்டியாரின் மூல பத்திரம் கஜா புயலின் பொழுது காணாமல் போய்விட்டது. தாவா சொத்திற்கும், பிரதிவாதிக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. பிரதிவாதி தாவா சொத்தை சட்டவிரோதமாக வாதியிடம் கபலிகரம் செய்யும் நோக்கோடு

செயல்பட்டு வருவதால் பிரதிவாதியின் செயல் சட்டவிரோதமான செயல் என்றும், வாதியின் தனிப்பட்ட உரிமை பாதுகாக்கப்பட வேண்டியது.

**2.4.** வாதியின் பாட்டியார் தாவா சொத்தினை கிரயம் பெற்றபொழுது தாவா சொத்தின் புல எண்.19 என்றும், தற்பொழுது அதற்கு புதிய புல எண்.19/1A என உள்ளது. வாதி புல எண். 19/1A ல் 64 செண்ட் மட்டும் வாதிக்கு உரிமையுள்ளது. பிரதிவாதிக்கோ, வேறு நபர்களுக்கோ எவ்வித உரிமையும் இல்லை. தாவா புல எண்.19/1A முழு விஸ்தீரணம் 28.05 ஏர்ஸ் ஆகும. மேற்படி 26 ஏர்ஸ் மட்டுமே வாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் கிடைக்கப்பெற்றுள்ளது. மீதமுள்ள 2 1/2 ஏர்ஸில் ஏதோ உரிமை ஆவணங்கள் உள்ளதாகவும், மேற்படி 2 1/2 ஏர்ஸில் கூட்டு பட்டாதாரராக பிரதிவாதியின் தகப்பனார் பெயர் உள்ளது. தாவா சொத்தான 26 ஏர்ஸில் பிரதிவாதிக்கோ, அவரது உறவினர்களுக்கோ எவ்வித உரிமையும் இல்லை. மேற்படி வாதிக்கு சொந்தமான 26 ஏர்ஸ் சொத்திற்கான நான்கெல்லை விபரங்கள் மட்டுமே வழக்குரையிலும், செட்டில்மெண்ட் ஆவணங்களிலும் குறிப்பிட்டுள்ளார். மேற்படி வாதி குறிப்பிட்டுள்ள தாவா சொத்திற்கான நான்கெல்லைக்குட்பட்ட சொத்துக்களை பிரதிவாதியோ, அவரது ஆட்களோ இடையூறு செய்ய சட்டபடி தடை செய்யப்பட்டுள்ளார். எனவே தாவா சொத்துக்களில் வாதியின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, அவரது ஏஜெண்டுகளோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 3) <u>பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிர் வழக்குரையின் சுருக்கம்</u> :-

**3.1.** வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கானது சட்டப்படியும் நியாயப்படியும், உண்மை நிலவரப்படியும் நிலைநிற்க தகுந்ததல்ல. எடுத்த எடுப்பில் வழக்கு தள்ளுபடி

செய்யப்பட வேண்டியுள்ளது. வாதி பொய்யான சங்கதிகளை கூறி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கானது எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாக உள்ளது. இதனடியில் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள உண்மை சங்கதிகளை தவிர்த்து மற்றவற்றை வன்மையாக மறுக்கிறார். அவற்றை வாதியே சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க சட்டப்படி கடமைப்பட்டுள்ளார்.

**3.2.** இந்த வழக்கு வாதி பிரதிவாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ள சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் உண்மைக்கு புறம்பான சங்கதிகளை கூறி இந்த வழக்கினை தற்போது ஏதோ தாவா சொத்தின் அனுபவம் தன்னிடம் உள்ளதாக கூறி உள் நோக்கத்துடன் வழக்கு உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கில் குறிப்பிட்ட சொத்தானது வாதிக்கு சொந்தமானதல்ல, வழக்குரையில் சொல்லியிருப்பது போன்று தாவா சொத்தினை வாதிக்கு கடந்த 11.09.2018 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரப்படி வாதிக்கு எழுதி வைத்து அதுமுதல் அனுபவத்தில் உள்ளதாக வாதி கூறுவதும் உண்மைக்கு புறம்பான ஒன்றாகும்.

**3.3.** தாவா சொத்து வாதியின் தகப்பனாருக்கு வாரிசு முறையில் கிடைத்தது என்பதை வாதியே சட்டப்படி நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். தாவா சொத்து வாதியின் பாட்டிக்கு சொந்தமாக இருந்தது என்பதும், வாதியின் பாட்டிக்கு 25.07.1956 தேதியிட்ட கிரய பத்திரப்படி தாவா சொத்து சொந்தமாக இருந்து வந்தது என்பதற்கான ஆவணத்தை வாதி தாக்கல் செய்யாததற்கான காரணத்தையும் கூறவில்லை ஏதோ அசல் ஆவணம் கஜா புயலில் காணாமல் போய்விட்டது என்று கூறுவதும் பொய்யான ஒன்றாகும்.

**3.4.** வாதி தாவா சொத்திற்கான பட்டா சிட்டா ஆகியவற்றையும் அவரது பெயருக்கு மாற்றி விட்டதாக தற்போது கூறியிருப்பது சட்டப்படி ஏற்க கூடிய ஒன்றல்ல. தாவா சொத்தினை பொறுத்து ஒரு ஆவணத்தினை மோசடியாக ஏற்படுத்தி அதனை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு பட்டாவினை மாற்றுவதற்காகவே வாதி அவரது தந்தையிடமிருந்து செட்டில்மெண்ட்டை ஏற்படுத்திக் கொண்டுள்ளார். தாவா சொத்து அனுபவம் எந்த காலத்திலும் வாதி மற்றும் அவர் தகப்பனார் அனுபவத்தில் இருந்ததில்லை. பிரதிவாதியின் அனுபவத்தில் 40 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது என்பது தான் உண்மையான ஒன்றாகும்.

**3.5.** வாதி வழக்குரையில் சொல்லியுள்ள வழக்கு மூலமானது கற்பனையான ஒன்றாகும். கடந்த 12.10.2019 ம் தேதியன்று தாவா சொத்தில் வாதி உழவு செய்து கொண்டிருந்த போது வேலை ஆட்களை வேலை செய்யக்கூடாது என தடுத்து நிறுத்தியதாக கூறியிருப்பதும் தாவா சொத்தினை கிரயத்திற்கு வாதியிடம் கேட்டு அவ்வாறு கொடுக்காததினால் தாவா சொத்தினை அபகரிக்கும் எண்ணத்தில் இந்த பிரதிவாதி செயல்பட்டார் என வாதி வழக்குரையில் கூறியிருப்பது கற்பனையான பொய்யான ஒன்றாகும். வாதி கூறும் வழக்கு முலம் தவறானதாகும். பிரதிவாதி ஆள் பலமும் பண பலமும் மிக்கவர் என்றும் கூறியிருப்பது உண்மைக்கு புறம்பான ஒன்றாகும். வாதி வழக்குரையில் கோரியிருக்கும் நிரந்தர உறுத்துக்கட்டளையோ வேறு எந்த பரிகாரமோ சட்டப்படி கிடைக்கக்கூடியதல்ல என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியுள்ளது.

**3.6.** இந்த பிரதிவாதியின் தந்தையான கணேசன் என்பவரால் தாவா புல எண் 19/1 ஏ-ல் உள்ள 2 1/2 ஏர்ஸ் நிலத்திளை கடந்த 20.02.1980 ம் தேதியில் கிருஷ்ணசாமி

மனைவி ராஜலெட்சுமி என்பவரிடம் சுத்த கிரய சாசன பத்திரப்படி கிரயம் பெற்றும் அந்த பத்திரம் மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.260/1980 என பதிவு செய்யப்பட்டுள்ளது. அதுமுதல் மேற்படி நிலத்தினை இந்த பிரதிவாதியின் தந்தையார் சர்வசுதந்திர பாத்தியங்களுடன் ஆண்டனுபவம் செய்து வருகிறார். இந்த பிரதிவாதியின் தந்தையாருக்கு சொந்தமான மேற்படி சொத்திற்கு கீழ்பாகமாக உள்ள கோபாலசாமி மனைவி அஞ்சுதத்தம்மாள் அவர்களின் சொத்தான வழக்கு சொத்தினை அவரது மகனான சிதம்பரம் என்பவரிடமிருந்து 1980 ம் ஆண்டு வாய்மொழி கிரயம் பெற்று முழுத் தொகையையும் இந்த பிரதிவாதியின் தந்தையார் கொடுத்து நிலத்தின் அனுபவத்தினையும் மேற்படி அஞ்சுதத்தம்மாள் பெயரிலுள்ள கிரய பத்திரத்தின் அசலையும் இந்த பிரதிவாதியின் தந்தையார் வசம் ஒப்படைக்கப்பட்டு அதுமுதல் பிரதிவாதியின் தந்தையார் அனுபவம் எடுத்துக் கொண்டு தொடர்ந்து எவ்விதமான ஆட்சேபனையும் இன்றி தாவா நிலத்தினை சாகுபடி செய்து ஆண்டனுபவம் செய்து வந்துள்ளார், இந்த பிரதிவாதியின் தந்தையான கணேசன் நீண்டகாலமாக நிலச்சொந்தக்காரர் என்ற முறையில் சாகுபடி செய்து அனுபவித்து வந்ததை அறிந்து வட்டாட்சியரால் நிலவுடமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1988 ம் ஆண்டு பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பட்டாவில் பிரதிவாதியின் தந்தை கணேசன் பெயரும் மற்றும் ஒருபகுதி சொத்தினை பிரதிவாதியின் தந்தை கணேசனுக்கு விற்பனை செய்துள்ள ராஜலெட்சுமி பெயரும் கூட்டு பட்டாவாக உள்ளது. கணேசன் பெயரில் உள்ள பட்டா அசல் இந்த பிரதிவாதியால் ஆவணமாக இத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.7.** பிரதிவாதியின் தந்தையார் கடந்த 2008 ம் ஆண்டில் காலமாகிவிட்டார். அதன் பிறகு இந்த வழக்கின் பிரதிவாதியே தாவா புல எண்ணில் உள்ள 0.28.50 ஏர்ஸ் நஞ்சை

நிலத்தையும் வாரிசு முறையில் அடைந்து ஆண்டனுபவம் செய்து வருகிறார். தாவா சொத்துக்கு பிரதிவாதியின் தந்தையாரால் கிஸ்தி செலுத்தப்பட்டுள்ளது. கைவசம் உள்ள கிஸ்தி இரசீதுகளையும் இந்த பிரதிவாதி ஆவணமாக இத்துடன் தாக்கல் செய்துள்ளார். மேலும் இந்த பிரதிவாதியின் தந்தை கணேசன் கிரயம் பெற்ற பத்திரம் அசல் பத்திரம் மற்றும் அஞ்சுதத்தம்மாள் பெயரிலுள்ள கிரய பத்திரம் அசல் ஆகியவற்றையும் ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் பத்திரம் கஜா புயலில் காணாமல் போய்விட்டதாக வாதி பொய்யாக கூறி இந்த வழக்கினை தொடர்ந்துள்ளார். மேலும் இந்த வாதியின் தந்தையாரான சிதம்பரம் பெயரில் தாவா சொத்துக்கான பட்டாவும், மோசடியாக மாற்றப்பட்டு தாவா சொத்தின் அனுபவமும் இல்லாத நிலையில் வாதிக்கு கடந்த 11-09-2018 ம் தேதியன்று எழுதிக் கொடுத்துள்ளதாக கூறப்படும் செட்டில்மெண்ட் ஆவணம் என்பது சட்டப்படி செல்லக்கூடியதல்ல. வாதியானவர் இந்த பிரதிவாதியின் தந்தையார் இறந்த பிறகு தாவா சொத்தினை பிரதிவாதியிடமிருந்து மோசடியாக அபகரித்துக் கொள்ளும் கெட்ட உள் நோக்கத்துடன் வாதி தன் தந்தையாரை வைத்துக் கொண்டு மோசடியாக செட்டில்மெண்ட் எழுதி பெற்றும் அனுபவம் செய்வதாக பொய்யாக கூறி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் உள்ளார். வாதி கோரும் எந்த ஒரு பரிகாரமும் சட்டப்படி வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல. பிரதிவாதியின் தந்தை பெயருக்கு முன்பு வழங்கப்பட்டுள்ள பட்டாவினை வாதி செல்வாக்கு செய்து மாற்றம் செய்திருக்கக்கூடும் எனவும் இந்த பிரதிவாதி தற்போது அறிய வருகிறார். அந்த பட்டாவும் சட்டப்படி செல்லக் கூடியதல்ல. வாதி வழக்குரையில் கூறியிருக்கும் சொத்து விவரம் தவறான ஒன்றாகும். வாதிக்கு தாவா சொத்தில் 26 ஏர்ஸ் நிலம் சொந்தம் என கூறுவதும்

ஏற்ககூடியதல்ல இந்த பிரதிவாதியே தொடர்ந்து சாகுபடி செய்துவரும் நிலத்தினை பொறுத்து இந்த வாதியே பிரதிவாதிக்கு இடையூறு கொடுத்தும் வருகிறார்.

**3.8.** வாதி தனது தந்தையார் மூலமாக ஒரு மோசடி செட்டில்மெண்ட் பத்திரத்தை ஏற்படுத்திக் கொண்டும் அதனை அனுகூலமாக வைத்துக் கொண்டு தற்போது தாவா சொத்தினை பிரதிவாதியிடமிருந்து அபகரிக்க முயற்சித்து இந்த வழக்கை தொடர்ந்துள்ளார். வாதியிடம் தாவா சொத்து அனுபவம் அறவே இல்லை. பிரதிவாதி தாவா நிலத்தினை சாகுபடி செய்தும் பயிர்காப்பீடு செய்து தொடர்ந்து அனுபவித்து வருவதற்கான சிட்டா, அடங்கல் நகல், மற்றும் இதர ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி அனுபவத்தில் உள்ள தாவா நிலத்தினை பொறுத்து வாதிக்கு நிரந்தர உறுத்துக்கட்டளையோ அல்லது தற்காலிக உறுத்துக்கட்டளையோ வழங்கினால் இந்த பிரதிவாதிக்கு ஈடு செய்ய முடியாத பாதிப்பும் கஷ்டமும் ஏற்படும். வாதி தற்காலிக உறுத்துக்கட்டளை பெற்றுக் கொண்டு தாவா சொத்தில் பிரவேசிக்கும் நோக்கத்துடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி சுத்தமான கரங்களுடன் இந்த வழக்கினை தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து பிரதிவாதியின் தந்தையாருக்கு 1980 ம் ஆண்டு கிடைத்து நீண்டகால அனுபவத்தின் அடிப்படையில் சொந்தமாகியுள்ளது. அதன் பிறகு பிரதிவாதிக்கு தாவா சொத்து கிடைக்கப்பெற்று சர்வ சுதந்திர பாத்தியங்களுடன் ஆண்டனுபவம் செய்து வருகிறார். வாதிக்கு உண்மையில் சொத்து சொந்தமாக இருக்கும்பட்சத்தில் அனுபவத்தினை பெறுவதற்காகவே வழக்கினை தாக்கல் செய்திருக்க முடியுமே தவிர உறுத்துக்கட்டளை கோரவும் சட்டப்படி இயலாது என்பதால் வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று பிரதிவாதி எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார்.

**4)** இவ்வழக்கில் தீர்வு காணும் பொருட்டு, வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றை இந்நீதிமன்றம் நன்கு பரிசீலித்து கீழ்கண்ட வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டன.

**வழக்கெழுவினாக்கள்** :-

1. தாவா சொத்து வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ளதா?
2. வாதி வழக்குரையில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
3. வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

**5) இருதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள்** :-

வாதி தரப்பில் வாதி முத்துக்குமரன் வா.சா.1 ஆகவும், ரமேஷ் என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு வா.சா.1ன் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.1ன் குறுக்கு விசாரணையின்போது பி.சா.ஆ.1 ஆவணமும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி செல்வகுமார் பி.சா.1 ஆகவும், சுப்ரமணியன் என்பவர் பி.சா.2 ஆகவும், உத்திராபதி என்பவர் பி.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டு பி.சா.1ன் மூலம் பி.சா.ஆ.2 முதல் பி.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6) வாதி தரப்பு வாதுரையின் சுருக்கம்** :-

வாதி தரப்பில் தாவா சொத்தானது வாதியின் உடமையிலும், அனுபோத்திலும் இருப்பதை பிரதிவாதி இடையூறு செய்வதை வாதியானவர் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளதால் வாதி கோருகின்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிரதிவாதிக்கு எதிராக கிடைக்கதக்கது என வாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் செய்தார்.

**7) பிரதிவாதி தரப்பு வாதுரையின் சுருக்கம்** :-

தாவா சொத்தானது வாதியின் அனுபோகத்தில் இல்லை என்றும்,

அஞ்சுததம்மாளுக்கு சொந்தமான தாவா சொத்தினை அவரது மகனான சிதம்பரம் என்பவரிடமிருந்து 1980 ம் ஆண்டு பிரதிவாதியின் தந்தையார் வாய்மொழி கிரயம் பெற்றார் என்றும், அப்போது தாவா சொத்தையும் அதன் மூல பத்திர அசல் ஆவணத்தையும் பிரதிவாதியின் தந்தையிடம் ஒப்படைத்து இதுநாள் வரை தாவா சொத்தானது பிரதிவாதியின் அனுபோகத்தில் இருந்து வருவதை தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் பிரதிவாதி நிரூபித்துள்ளதால் வாதியின் வழக்கை பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என பிரதிவாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் செய்தார்.

8) **<u>தீர்வு</u>** :-

**<u>எழுவினா -1 மற்றும் எழுவினா - 2- க்கான தீர்வுகள் :-</u>**

i) வாதி தாவா சொத்தில் உடமையிலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறார் என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பானது பிரிவு 101 இந்திய சாட்சிய சட்டத்தின்கீழ் வாதியை சார்ந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

ii) தாவா சொத்தானது வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறதா? என்பது குறித்து பரிசீலிக்கையில், நாகப்பட்டிணம் பதிவு மாவட்டம், மன்னார்குடி சார்பதிவகம், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, (54), 53, நெம்மேலி வருவாய் கிராமத்தில் தாவா சொத்தானது உள்ளது என வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லப்பட்டுள்ளது.

iii) வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் விதமாக வாதி முத்துக்குமரன் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக கடந்த 25.07.1956 ம் தேதியிட்ட வாதியின் பாட்டியார் கிரயம் பெற்ற கிரய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும், கடந்த

11.09.2018 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் அசல் வா.சா.ஆ.2 ஆகவும், கடந்த 08.03.2019 ம் தேதியிட்ட வாதியின் பெயரில் ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு அசல் வா.சா.ஆ.3 ஆகவும், கடந்த 15.10.2010 ம் தேதியிட்ட கிஸ்தி ரசீது நகல் வா.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

iv) மேலும் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்தபோது கடந்த 25.07.1956 ம் தேதியிட்ட கிரய ஆவணத்தின் அசல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.1 ன் சாட்சியத்தை ஒத்துரைத்து ரமேஷ் என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்.

v) பிரதிவாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் விதமாக பிரதிவாதி செல்வகுமார் பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக கடந்த 20.02.1980 ம் தேதியிட்ட ராஜலெட்சுமி அம்மாளிடம் பிரதிவாதியின் தந்தை கிரயம் பெற்ற தாவா சொத்தின் ஒரு பகுதிக்கான கிரய பத்திரம் பி.சா.ஆ.2 ஆகவும், கடந்த 28.12.1988 ம் தேதியிட்ட பிரதிவாதியின் தந்தைக்கு நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வட்டாட்சியர் வழங்கிய பட்டா பி.சா.ஆ.3 ஆகவும், கடந்த 02.04.1988 ம் தேதியிட்ட தாவா சொத்து பிரதிவாதி தந்தை கணேசன் செலுத்திய கிஸ்தி இரசீது பி.சா.ஆ.4 ஆகவும், கடந்த 05.02.1989 ம் தேதியிட்ட தாவா சொத்து பிரதிவாதி தந்தை கணேசன் செலுத்திய கிஸ்தி இரசீது பி.சா.ஆ.5 ஆகவும், கடந்த 18.02.1990 ம் தேதியிட்ட தாவா சொத்து பிரதவாதி தந்தை கணேசன் செலுத்திய கிஸ்தி இரசீது பி.சா.ஆ.6 ஆகவும், கடந்த 23.03.1992 ம் தேதியிட்ட தாவா சொத்து பிரதிவாதி தந்தை கணேசன் செலுத்திய கிஸ்தி இரசீது பி.சா.ஆ.7 ஆகவும், கடந்த 17.03.1999 ம் தேதியிட்ட தாவா சொத்து பிரதிவாதி தந்தை கணேசன் செலுத்திய கிஸ்தி இரசீது பி.சா.ஆ.8 ஆகவும், கடந்த 06.03.2000 ம் தேதியிட்ட தாவா சொத்து பிரதிவாதி தந்தை கணேசன்

செலுத்திய கிஸ்தி இரசீது பி.சா.ஆ.9 ஆகவும், கடந்த 25.03.2002 ம் தேதியிட்ட தாவா சொத்து பிரதிவாதி தந்தை கணேசன் செலுத்திய கிஸ்தி இரசீது பி.சா.ஆ.10 ஆகவும், கடந்த 19.03.2007 ம் தேதியிட்ட தாவா சொத்து பிரதிவாதி தந்தை கணேசன் செலுத்திய கிஸ்தி இரசீது பி.சா.ஆ.11 ஆகவும், கடந்த 20.01.2009 ம் தேதியிட்ட தாவா சொத்து பிரதிவாதி தந்தை கணேசன் செலுத்திய கிஸ்தி இரசீது பி.சா.ஆ.12 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.சா.1ன் சாட்சியத்தை ஒத்துரைத்து சுப்ரமணியன் என்பவர் பி.சா.2 ஆகவும், உத்திராபதி என்பவர் பி.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்.

vi) வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 25.07.1956 ம் தேதியன்று கிருஷ்ணமூர்த்தி ஐயர் என்பவர் அஞ்சுதத்தம்மாள் என்பவருக்கு நெம்மேலி கிராம சர்வே எண்.19/1ல் விஸ்தீரணம் 66 2/3 செண்ட் கிரயம் கொடுக்கப்பட்டு மேற்கண்ட கிரய ஆவணமானது மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2574/1956 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணப்படி தாவா சொத்தினை அஞ்சுதத்தம்மாள் என்பவர் கிரயம் வாங்கினார் என்பதற்கான உரிமை மூல பத்திரம் என்பது தெரிய வருகிறது. மேற்கண்ட பத்திரத்தை வாதி தரப்பில் சான்றிட்ட நகலாக வா.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் மேற்கண்ட ஆவணத்தை வாதியை குறுக்கு விசாரணை செய்தபோது அதன் அசல் ஆவணத்தை பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்துள்ளார்.

vii) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், வாதிக்கு அவரது தந்தை சிதம்பரம் 11.09.2018 ம் தேதியன்று தாவா சொத்தில் 26 ஏர்ஸ் நிலத்தை இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதி கொடுத்தார் என்பது தெரிய வருகிறது. மேற்படி வா.சா.ஆ.2 ஆவணப்படி தாவா சொத்தை சிதம்பரம் என்பவர்

வாதிக்கு இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதி கொடுத்தார் என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 08.03.2019 ம் தேதியன்று தாவா சொத்தானது வாதி மற்றும் பிரதிவாதியின் தந்தை பெயரில் கூட்டாக பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், தாவா சொத்திற்கான கிஸ்தி ரசீது வாதி மற்றும் பிரதிவாதியின் தந்தைக்கு கூட்டாக வழங்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

viii) வாதி தரப்பில் தாவா சொத்தானது வாதியின் பாட்டிக்கு பின்னர் வாதியின் தந்தைக்கு கிடைக்கப்பெற்று அவரது அனுபோகத்தில் இருந்ததை வா.சா.ஆ-2 ஆவணமான இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் வாதிக்கு எழுதிக்கொடுத்து வாதியின் அனுபோகத்திலும், சுவாதீனத்திலும் இதுநாள்வரை இருந்து வருவதை பிரதிவாதி இடையூறு செய்கிறார் என்று கட்சி செய்யப்படுகிறது. மேற்படி வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ-2 ஆவணமான இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தை பரிசீலனை செய்கையில், " **தாவா சொத்தானது வாதியின் தந்தைக்கு கூட்டு பட்டா எண்.264 என்பதை தனக்கு சொந்தமானது என்றும், தனக்கு வீதமான சொத்தை சர்வ சுதந்திர பாத்தியங்களுடன் ஆண்டு அனுபவித்துக்கொண்டு வந்த சொத்தை"** இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ix) மேற்கண்ட வா.சா.ஆ.2 ஆவணப்படி தாவா சொத்து 66 2/3 செண்டில் 64 செண்ட் நிலத்தை வாதிக்கு இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதிக்கொடுத்துள்ளார் என்பது தெரிய வருகிறது. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், பிரதிவாதியின் தந்தைக்கு ராஜலெட்சுமி என்பவர் 20.09.1980 ம் தேதியில் தாவா கிராம சர்வே எண்.15/2 ஏ-யில் 57 2/3 செண்ட் நிலமும், தாவா

சர்வே எண்ணில் 6 செண்ட் நிலமும் கிரய ஆவணம் மூலம் எழுதி கொடுத்தார் என்பது தெரிய வருகிறது. மேற்படி பி.சா.ஆ.2 கிரய ஆவணத்தில் தாவா சொத்திற்கான 6 செண்ட் நிலம் ராஜலெட்சுமி அம்மாள் என்பவரால் கிரயம் வாங்கப்பட்டு அனுபோகம் செய்து வருகின்ற சொத்தை கிரயம் செய்து தருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

x) வாதி தரப்பில் தாவா சொத்தானது வாதியின் பாட்டி அஞ்சுதத்தம்மாள் என்பவரால் 66 2/3 செண்ட் கிரயம் வாங்கப்பட்டு அனுபோகம் செய்து வந்ததை அஞ்சுதத்தம்மாளுக்கு பின்னர் தாவா சொத்தில் 64 செண்ட் நிலத்தை வாதியின் தந்தைக்கு கிடைக்கப்பெற்று பின்னர் வாதிக்கு வாதியின் தந்தையார் இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் வாதிக்கு கிடைக்கப்பெற்றதாக கட்சி செய்யப்படுகிறது. மீதமுள்ள 2 ½ செண்ட் நிலத்தை பிரதிவாதியின் தந்தை கிரயம் பெற்றதை பொறுத்து தங்களுக்கு ஏதும் ஆட்சேபணை இல்லை என வாதம் செய்யப்பட்டது. இருப்பினும், வாதியின் பாட்டி கிரயம் பெற்ற 66 2/3 செண்ட் சொத்தில் பிரதிவாதியின் தந்தைக்கு கிரயம் கொடுத்த ராஜலெட்சுமிக்கு எவ்வாறு சென்றது என்பது பற்றி வாதி தரப்பில் சாட்சியம் எதுவும் முன்னிறுத்தவில்லை.

xi) மேலும், தாவா சொத்தானது பிரதிவாதியின் தந்தை பி.சா.ஆ.2 ஆவணம் மூலம் பெற்ற 2.5 ஏர்ஸ் சொத்து குறித்து தங்களுக்கு எந்தவித ஆட்சேபணை இல்லை என்று வாதம் செய்யப்பட்டாலும், மீதமுள்ள தாவா சொத்துக்கள் வாதியின் தந்தைக்கு எவ்வாறு கிடைத்தது என்பதை நிரூபணம் செய்ய வேண்டிய பொறுப்பு கொண்ட வாதியானவர் நிரூபிக்கவில்லை. மாறாக, அனுபோகத்தின் அடிப்படையில் வாதியின் பாட்டிக்கு பின்னர் வாதியின் தந்தைக்கு தாவா சொத்து கிடைக்கப்பெற்றதாக வாதி தரப்பில் கட்சி செய்யப்படுகிறது. மேற்படி வாதியின் பாட்டியின் வாரிசுதாரர்கள் குறித்து பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, **“எனது அப்பாவிற்கு இரண்டு சகோதரிகள்**

**இருந்தார்கள், எனது பாட்டிக்கு மூன்று பேர் வாரிசுதாரர்கள்"** என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வாதி தரப்பு சாட்சியத்தின்படி அஞ்சுதத்தம்மாளின் வாரிசுதாரர்கள் வாதியின் தந்தையும் சேர்த்து மூன்று பேர் வாரிசுதாரர்கள் என்பது தெரிய வருகிறது.

xii) வாதியின் பாட்டிக்கு மூன்றுபேர் வாரிசுதாரர்கள் இருக்கும் சூழ்நிலையில் வாதியின் பாட்டி கிரயம் பெற்ற தாவா சொத்தானது வாதியின் தந்தைக்கு மட்டும் எவ்வாறு அனுபோக ரீதியில் கிடைத்தது என்பதை வாதி தரப்பில் நிரூபிக்கவில்லை. மேலும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.3 ஆவணமான பட்டா மாறுதல் உத்தரவிலும், வா.சா.ஆ.4 ஆவணமான கிஸ்தி ரசீதும் பிரதிவாதியின் தந்தை மற்றும் வாதியின் பெயரில் கூட்டு பட்டா மற்றும் கிஸ்து ரசீது வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேற்கண்ட வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் பிரதிவாதியின் தந்தை கிரயம் பெற்ற 2 ½ ஏர்ஸ்க்காக கூட்டு பட்டாவில் பிரதிவாதியின் தந்தை பெயர் சேர்க்கப்பட்டது என்று வாதம் செய்தாலும், மேற்படி இதர சொத்துக்கள் 64 செண்ட் சொத்தும் வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதை உரிய சான்றாவணங்களுடன் வாதியானவர் நிரூபிக்கவில்லை என்பது தெரிய வருகிறது.

xiii) தாவா சொத்தினை வாதியின் தந்தை சிதம்பரத்திடமிருந்து பிரதிவாதியின் தந்தை கணேசன் 1980 ல் தாவா சொத்தினை வாய்மொழியாக கிரயம் பெற்று தனது அனுபோகத்தில் இருந்து வருகிறது என்றும், அப்போது தாவா சொத்தின் மூல பத்திரத்தின் அசல் ஆவணத்தை பிரதிவாதியின் தந்தையிடம் ஒப்படைத்ததாக பிரதிவாதி தரப்பில் கட்சி செய்யப்பட்டு, மேற்கண்ட ஆவணம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்து பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் வாதியானவர் வழக்கு தாக்கல் செய்தபோது வாதியின் பாட்டி கிரயம் பெற்ற மூல பத்திர ஆவணமானது கஜா புயலில்

காணாமல் போய்விட்டதாக சொல்லியதால் மேற்கண்ட ஆவணம் பிரதிவாதி வசம் எவ்வாறு சென்றது என்பது குறித்து வாதி தரப்பில் காரணம் எதுவும் சொல்லவில்லை. ஆகவே, தாவா சொத்தானது வாதியின் அனுபோகத்தில் உள்ளது என்று வாதியானவர் கட்சி செய்தாலும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் பிரதிவாதியின் தந்தை பெயரில் கூட்டாக இருப்பதாலும் தாவா சொத்து வாதியின் தனித்த சுவாதீனத்தில் உள்ளது என்பதை வாதியானவர் நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

xiv) பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், பிரதிவாதியின் தந்தை மற்றும் ஒருவர் பெயரில் நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பட்டா என்பதும், பி.சா.ஆ.4 முதல் பி.சா.ஆ.12 வரையிலான ஆவணங்களானது தாவா சொத்திற்காக பிரதிவாதியின் தந்தை செலுத்திய கிஸ்து இரசீதுகள் அசல் ஆவணம் என்பது தெரிய வருகிறது. மேற்படி பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ.3 முதல் பி.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் பிரதிவாதியின் தந்தை தாவா சொத்தை அனுபோகம் செய்து வருவதற்கான ஆவணம் என்பது தெரிய வருகிறது. மேற்கண்ட ஆவணங்களை பொறுத்து வாதி தரப்பில் பிரதிவாதியின் தந்தை கிரயம் பெற்ற 2 ½ ஏர்ஸ் சொத்துக்காக கொடுக்கப்பட்ட கிஸ்து இரசீது ஆவணங்கள் என கட்சி செய்தாலும், தாவா சொத்தானது தற்போது வரை வாதியின் அனுபோகத்தில்தான் இருந்து வருகிறது என்பதற்கான எந்தவித தனித்த ஆவணமும், சாட்சியமும் போதுமானதாக முன் வைக்காததால் தாவா சொத்தானது வாதியின் அனுபோகத்திலும், சுவாதீனத்திலும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது. தாவா சொத்தானது வாதியின் அனுபோகத்திலும், சுவாதீனத்திலும் இல்லாததால் வாதி

கோருகின்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிரதிவாதிக்கு எதிராக வாதிக்கு கிடைக்கதக்கதல்ல என எழுவினா-1 மற்றும் எழுவினா-2 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

9) **எழுவினா-3 க்கான தீர்வு** :-

வாதி கோருகின்ற பிரதிவாதிக்கு எதிரான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்வு காணப்பட்டுள்ளதால் இதர பரிகாரங்கள் ஏதும் இல்லை என்றும், செலவுத்தொகையை அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என எழுவினா-3 க்கு தீர்வு காணப்படுகிறது.

10) **முடிவில்,**

1. தாவா செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.04.18 17:57:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**வாதி தரப்பு சாட்சிகள்** :-

| | |
|---|---|
| வா.சா.1 | திரு.முத்துக்குமரன் (வாதி), த/பெ. சிதம்பரம். |
| வா.சா.2 | திரு.ரமேஷ் (3 ம் தரப்பினர்), த/பெ. சிவசாமி. |

**வாதி தரப்பு சான்றாவணங்கள்** :-

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 25.07.1956 | 25.07.1956 ம் தேதியிட்ட வாதியின் பாட்டியார் கிரயம் பெற்ற கிரய ஆவணம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.2 | 11.09.2018 | 11.09.2018 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் அசல். |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.3 | 08.03.2019 | 08.03.2019 ம் தேதியிட்ட வாதியின் பெயரில் ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு அசல். |
| வா.சா.ஆ.4 | 15.10.2010 | 15.10.2010 ம் தேதியிட்ட கிஸ்தி ரசீது நகல். |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள்** :-

| | |
|---|---|
| பி.சா.1 | திரு.செல்வகுமார் (பிரதிவாதி), த/பெ. கணேசன். |
| பி.சா.2 | திரு.சுப்ரமணியன் (3 ம் தரப்பினர்), த/பெ. ஆறுமுகம். |
| பி.சா.3 | திரு.உத்திராபதி (3 ம் தரப்பினர்), த/பெ. ரத்தினம். |

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்** :-

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.1 | 25.07.1956 | 25.07.1956 ம் தேதியிட்ட கிரய ஆவணத்தின் அசல். |
| பி.சா.ஆ.2 | 20.02.1980 | 20.02.1980 ம் தேதியிட்ட ராஜலெட்சுமி அம்மாளிடம் பிரதிவாதியின் தந்தை கிரயம் பெற்ற தாவா சொத்தின் ஒரு பகுதிக்கான கிரய பத்திரம். |
| பி.சா.ஆ.3 | 28.12.1988 | 28.12.1988 ம் தேதியிட்ட பிரதிவாதியின் தந்தைக்கு நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வட்டாட்சியர் வழங்கிய பட்டா. |
| பி.சா.ஆ.4 | 02.04.1988 | 02.04.1988 ம் தேதியிட்ட தாவா சொத்து பிரதிவாதி தந்தை கணேசன் செலுத்திய கிஸ்தி இரசீது. |
| பி.சா.ஆ.5 | 05.02.1989 | 05.02.1989 ம் தேதியிட்ட தாவா சொத்து பிரதிவாதி தந்தை கணேசன் செலுத்திய கிஸ்தி இரசீது. |
| பி.சா.ஆ.6 | 18.02.1990 | 18.02.1990 ம் தேதியிட்ட தாவா சொத்து பிரதிவாதி தந்தை கணேசன் செலுத்திய கிஸ்தி இரசீது. |
| பி.சா.ஆ.7 | 23.03.1992 | 23.03.1992 ம் தேதியிட்ட தாவா சொத்து பிரதிவாதி தந்தை கணேசன் செலுத்திய கிஸ்தி இரசீது. |
| பி.சா.ஆ.8 | 17.03.1999 | 17.03.1999 ம் தேதியிட்ட தாவா சொத்து பிரதிவாதி தந்தை கணேசன் செலுத்திய கிஸ்தி இரசீது. |

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.9 | 06.03.2000 | 06.03.2000 ம் தேதியிட்ட தாவா சொத்து பிரதிவாதி தந்தை கணேசன் செலுத்திய கிஸ்தி இரசீது. |
| பி.சா.ஆ.10 | 25.03.2002 | 25.03.2002 ம் தேதியிட்ட தாவா சொத்து பிரதிவாதி தந்தை கணேசன் செலுத்திய கிஸ்தி இரசீது. |
| பி.சா.ஆ.11 | 19.03.2007 | 19.03.2007 ம் தேதியிட்ட தாவா சொத்து பிரதிவாதி தந்தை கணேசன் செலுத்திய கிஸ்தி இரசீது. |
| பி.சா.ஆ.12 | 20.01.2009 | 20.01.2009 ம் தேதியிட்ட தாவா சொத்து பிரதிவாதி தந்தை கணேசன் செலுத்திய கிஸ்தி இரசீது. |

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.04.18 17:57:57 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.